International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சேவல் கட்டு புதினத்தில் வெளிப்படும் சமூக மதிப்புகள்

**ப. உஷாராணி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே), உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

**முனைவர் மா. ஜாஸ்மின் பிரியா**
உதவிப்பேராசிரியர் &ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறை, ஏஜேகே கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நவக்கரை, கோயம்புத்தூர் – 641 105

Abstract

Social value is a measure of the value or importance that an individual or group has in society. Social values are constructed based on the common principles and standards that guide the behaviour, beliefs and traditions of a society. Social values have multifaceted dimensions such as personal values, group values, environmental values, aesthetic values, spiritual values. Moreover, social values play a complete role in shaping the values and behaviours of a society. Social value also constitutes the culture and identity of the society. This study is based on the hypothesis that such social value is constructed through the traditional game of cockfighting in the novel Sevalkattu.

**ஆய்வுச்சுருக்கம்**

சமூக மதிப்பு என்பது சமூகத்தில் ஒரு தனிநபரோ அல்லது குழுவோ கொண்டிருக்கும் மதிப்பு அல்லது முக்கியத்துவத்தின் அளவீடாகும். ஒரு சமூகத்தின் நடத்தை, நம்பிக்கைகள் மற்றும் மரபுகளை வழிநடத்தும் பொதுவான கொள்கைகள் மற்றும் தரநிலைகள் சார்ந்து சமூக மதிப்புகள் கட்டமைக்கப் பெறுகின்றன. தனிப்பட்ட மதிப்புகள் , குழு மதிப்புகள், சூழல் மதிப்புகள் , அழகியல் மதிப்புகள், ஆன்மீக மதிப்புகள் எனச் சமூக மதிப்புகள் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. மேலும் சமூக மதிப்புகள் ஒரு சமூகத்தின் விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை வடிவமைப்பதில் முழுமையான பங்களிப்பை ஆற்றுகின்றன. சமூக மதிப்பு சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் அடையாளமாகவும் திகழ்கின்றது. அத்தகு சமூக மதிப்பு சேவல்கட்டு புதினத்தில் சேவல் கட்டு எனும் மரபார்ந்த மற விளையாட்டால் கட்டமைக்கப்பெறுகின்றது எனும் கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வு அமைகின்றது.

**முதன்மைச் சொற்கள்**

சேவல்கட்டு, புதினம், யுவபுரஸ்கார், தவசி, சமூக மதிப்பு

**முன்னுரை**

சேவல்கட்டு என்பது சேவல் சண்டை விளையாட்டைக் குறிக்கும். இது தமிழர்களின் மரபார்ந்த விளையாட்டுகளில் ஒன்றாகும். இயற்கையாகவே சேவல்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளும் இயல்புடையவை. இந்தச் சண்டையை ஒரு களம் அமைத்து விளையாட்டாக நடத்தும் வழக்கம் தொன்றுதொட்டுக் காணப்பெறுகின்றது. சண்டைச் சேவல்களை முறையாகத் தயார்படுத்தி, குறிப்பிட்ட இடத்தில் கட்டிவைத்து சண்டையிட வைப்பதால், இவ்விளையாட்டு சேவல்கட்டு என வழங்கப் பெறுகின்றது.

**சேவல்கட்டின் தொன்மை**

ஏறுதழுவுதல் போலவே சேவல்கட்டும் சங்ககாலம் தொட்டே வழக்கில் காணப்பெற்ற மரபார்ந்த மற விளையாட்டாகும். போரில் மரணித்த வீரர்களுக்கு நடுகல் அமைப்பதைப் போன்று சேவல் சண்டையில் உயிரிழந்த சேவலுக்கும் நடுகல் நடும் வழக்கமும் தமிழ்நாட்டில் காணப்பெற்றது.

விக்கிரவாண்டிக்கு அருகிலுள்ள அரசலா புரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சேவல் சண்டையைக் காட்சிப் படுத்துகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அவ்வட்டெழுத்துக் கல்வெட்டில், சேவல் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள எழுத்துப் பொறிப்புகளைக் கொண்டு முகையூர் என்ற ஊரின் மேற்சேரியில் நடந்த சேவல் சண்டையில் இறந்த சேவலுக்காக நடப்பட்ட கல் எனும் செய்தி புலப்படுகின்றது. மேலும், காஞ்சி மாவட்டம் இந்தளூரிலும் கட்டுச் சேவலுக்கு நடுகல் அமைத்தமைக்கான சான்று காணப் பெறுகின்றது.

ஏறுதழுவலில் காளையின் திமிலை அடக்குவது போல சேவல்கட்டில் மனிதர்களின் குறுக்கீடு காணப்படுவதில்லை. சேவல்களுக்கு இடையே நடக்கும் சண்டை குழுவாக வேடிக்கை பார்க்கப் பெறுகின்றது. இரண்டு பறவைகளுக்கு இடையில் சண்டையை ஏற்படுத்துதல் மனிதத் தன்மைக்கு உட்பட்டதா உள்ளிட்ட விவாதங்களுக்கு அப்பால் சேவல்கட்டு அமைகின்றது. கால்நடை வளர்ப்பைப் போலவே பறவை வளர்ப்பும் விவசாயிகளின் இணைத் தொழிலாக அமைந்து உள்ளது. தகுதி பெற்ற உயிர்கள் மட்டுமே சமூகச் சூழலியலில் நிலைபெற்று வாழும் என்ற இயற்கை விதியை நடைமுறைப்படுத்தும் வகையில் ஆடு மாடுகளையும் கோழிகளையும் பழக்கப்படுத்தும் மறைகருவியாக இத்தகு மற விளையாட்டுகளைத் தமிழர்கள் கையாண்டு உள்ளனர். மேலும் மறமும் காதலும் தமிழர் களின் அடையாளம். போரிட்டு ஓய்ந்து குடியேற்றங்களில் அமர்ந்த தமிழர்கள் தம் மறச் சிந்தனைகளை மடைமாற்றும் கருவியாக இத்தகு விளையாட்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சேவல்கட்டு புதினம்

ம. தவசி எழுதிய சேவல்கட்டு புதினம் புதுமைப் பித்தன் பதிப்பகத்தின் வெளியீடாக 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. மூன்று தலைமுறை களாகச் சேவல்கட்டில் ஈடுபட்டு மீளமுடியாமல் குடும்பச் சொத்தையும் வாழ்க்கையையும் இழந்த குடியானவர்களைப் பற்றிய கதையாக இப்புதினம் அமைகின்றது. மேலும் சேவல் சண்டையை மையமிட்டுத் தமிழில் வெளிவந்த முதல் புதினம் எனும் பெருமைக்குரியது. இப்புதினத்திற்கு அதன் சிறந்த கதைக் களத்திற்காக 2011 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமியின் யுவபுரஸ்கார் விருது வழங்கப்பெற்றது.

### சேவல்கட்டு - கதைச்சுருக்கம்

புனவாசல் கிராமத்தைச் சார்ந்த போத்தையா தன்னுடைய தாத்தா ராஜவேல்துரையைப் போலவும் தன்னுடைய அப்பா சேவுகப்பாண்டிய னைப் போலவும் சேவல்கட்டில் பெருத்த ஆர்வமுடையவராகத் திகழ்ந்தார். போத்தையா வின் தாத்தா ராஜவேல்துரை சேவல்கட்டின் குருவாய்த் திகழ்ந்தவர். போத்தையாவின் அப்பா சேவல்கட்டில் ஈடுபட்டு தன்னுடைய சொத்துக் களை இழந்தவர். ஆனாலும் அவர் சேவல்கட்டின் மீதுள்ள பற்றினை இழக்கவில்லை. போத்தையா வும் தன்னுடைய அப்பாவைப் போலவே சேவல் கட்டைப் பற்றிய எந்தவிதமான நுணுக்கங்களும் தெரியாமலேயே சேவல்கட்டின் மீது விருப்பம் கொண்டு, சேவல்கட்டு நிகழும் கிராமங்களுக் கெல்லாம் செல்கிறார். தன் நண்பர்களான வேல்சாமி, ராமபாண்டி ஆலோசனையின் பேரில் சேவல்கட்டுக்குரிய சேவல்களை வாங்கி, அவற்றைச் சேவல்கட்டுக்குப் பழக்குகிறார். சிறிய அளவில் வெற்றிபெறுகிறார். ஆனால், அவரையே அறியாமல் பெருந்தோல்விகளைச் சந்தித்து, இறுதியில் மனநலம் பாதிக்கப்பட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். சேவல்கட்டால் மூன்று தலைமுறை பாதிக்கப்பட்டதாக அமையும் இக்கதைப்போக்கில் சேவல்கட்டின் நுணுக்கங்க ளையும் அவ்விளையாட்டுக்குச் சமூகம் அளித்த மதிப்பையும் படைப்பாளர் பரவலாகப் பதிவு செய்கின்றார்.

### வாழ்வியல் மதிப்புகள்

ஆப்ப நாட்டு ஜமீன் வேசுகப் பாண்டியன் வாழ்ந்த ஊரில் சேவல்கட்டு மிக முக்கிய நிகழ்வாகக் கருதப்பெற்றது. வாழ்க்கையையே விளையாட்டுக் காக அர்ப்பணிக்கும் மனநிலை ஜமீன் உட்பட ஊர்மக்கள் பலரிடம் காணப்பெற்றது. இதனை,

**“விதவிதமான மதுரஸங்கத்தில் மிதந்தபடியே விளையாட்டின் தீரா புதரில் மொங்கிப்போவார். வாழ்வே விளையாட்டுத்தான்…. கொக்கரிக்கும் சேவல் மாதிரி கொண்டை சிலிப்பி உற்சாகமாக இருப்போம்”** [1]என்பார். எனும் பகுதி உணர்த்து கின்றது. வாழ்தலுக்கான முன்னோடி போல சேவலைக் கருதிடும் போக்கு அதற்களிக்கப் பெற்ற வாழ்வியல் மதிப்பைக் காட்டுகின்றது.

### செல்வ மதிப்புகள்

சேவல்கட்டின் வாயிவாக வரும் வெற்றி செல்வத்தை விட உயர்ந்ததாகக் கருதப்பெற்றது. சொத்தை இழந்த வலியின்றி சேவல்கட்டின் வெற்றியையே உயர்வாகக் கருதும் மனநிலையை,

**“கட்டில் ஒருமுறை தோற்றால் கூட துவண்டு விடும் ஆட்கள் மத்தியில் ஒரு தலைமுறை சொத்தையே அடகு வைத்துத் தோல்வி கண்டாலும் தலைக்கேறிய பித்த்த்துடன் வந்து கொண்டிருக்கும் சேவுகப் பாண்டியனா கொக்கா? நடந்து வந்தவர்கள் உரக்கப்பேசினர்”**[2] எனும் பகுதி உணர்த்துகின்றது. தலைமுறைச் செல்வத்தை விட சேவல்கட்டு உணர்வாகக் கருதப்பெற்ற தன்மை இதன் வாயிலாக புலப்படுகின்றது.

### ஆற்றல் மதிப்புகள்

குறிப்பிட்ட நிலப்பகுதியின் ஆளுகைத் தலைவராக ஜமீன் கருதப்பெற்றார். ஆப்ப நாட்டில் செல்வமும், வீரமும், படையும், கல்வியும், மரபும் ஜமீன் தகுதிகளாக இருக்க சேவல்கட்டும் அதனோடு இணைக்கப்பெறுகின்றது. ஒரு ஜமீன் அந்நாட்டின் மற விளையாட்டான சேவல்கட்டை

நிச்சயம் அறிந்திருக்க வேண்டும் எனும் மன நிலை மக்களிடம் காணப்பெறுகின்றது. இதனை,

**“சேவலை விடத் தெரியாதவன் எல்லாம் ஜமீனாம். விசில் அடித்துச் சிரித்தது ஜனம். நெஞ்சை வாளால் அறுத்துக் கூறு போடுவது மாதிரி இருந்தது பாண்டியனுக்கு. காதுக்குள் சிரிப்புச் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. அந்த சேவல் வாயில் லேசான ரத்தம். அங்கிட்டுப் போயி பொண்டாட்டி சேலையைத் துவை”**[3]

எனும் வரிகள் உணர்த்துகின்றன. வேவல்கட்டு ஜமீனுக்குரிய தகுதியாக பார்க்கப்படுதலும் அத்தகுதி அற்றோரை அவமானப்படுத்துவதும் இதன் வழி உணரலாகின்றது. மேலும் சேவல் கட்டு ஜமீனின் ஆற்றல் மதிப்பாகப் பார்க்கப் பெற்றது.

**தன்மான மதிப்புகள்**

சேவல்கட்டை ஒரு விளையாட்டாகக் கருதாது அதனைத் தன்மானத்தோடு ஒப்பிட்டுக் காணும் மனநிலை இப்புதினத்தில் காணப்பெறுகின்றது. இம்மனநிலை அதீதமாகும்போது மனப்பிறழ்வு நிலை ஏற்படுகின்றது. பதினோரு சேவல்களோடு களமிறங்கும் சேவுகப் பாண்டியன் தோல்வியுற தன் சேவல்களை அதிக விலை கொடுத்து வாங்கி அதனைத் தன் கைகளால் கொன்று குவிக்கிறான். தனக்கு நேர்ந்நத அவமானத்தை சேவல்களைக் கொன்று தீர்த்துக்கொள்ள முனையும் அவன் செயல்பாடு மனநோயின் குறியீடாக அமைகின்றது. இதனை,

**“சேவுகன் கலங்கிய கண்களோடு கேட்டான். கடைசியில் அதிக காசுக்கு ஒத்துக் கொண்டனர். பதினொரு சேவலும் அவன் கைக்கு வந்தது. அதன்பின் நடந்ததைப் பார்த்து ஆப்பநாட்டு சனமே அதிர்ச்சியானது. ஆம். அத்தனை சேவல்களின் தலையையும் சேவுகன் கதற கதற திருகினான். கொக்.. கொக்.. படபடப்பான குதவலையில் கை வைக்கும்போதும் கோவென எழுப்பும் குரலும் அழுகையும் அவனுக்கு கொஞ்சம் சாந்தத்தைக் கொடுத்தது.”** [4]

எனும் பகுதி உணர்த்துகின்றது. சேவல் கட்டின் தோல்வி, அவமானத்தின் குறியீடாகச் சமூகத்தால் கருதப்பெற்றமை இதன் வழி புலனாகின்றது.

**பாலின மதிப்புகள்**

சேவல்கட்டு போன்ற வீர விளையாட்டுகள் ஆண்களுக்குரியது எனும் பாலினச் சார்புக் கருத்தியலை சேவல்கட்டுப் புதினம் கட்டுடைக் கின்றது. தொடக்க காலத்தில் சேவல்கட்டு சாஸ்திரத்தை ஒரு பெண்தான் எழுதியுள்ளாள். ஆப்பநாட்டுக்கு அங்கம்மா கிழவிதான் குருவாக இருந்து சேவல்கட்டை நெறிப்படுத்துகிறார். பிற்காலத்தில் அது ஆண்களுக்குரிய விளையாட் டாக மாற்றப்பெறுகின்றது. இஃது,

**“ஆரம்பத்தில் சேவக்கட்டை ஆடியவர்களும் பெண்கள்தான். கொண்டையன் கோட்டை சனம் ஆப்ப நாட்டுக்கு வந்தபோது அங்கம்மா கிழவிதான் குரு. அவளிடம் தான் கட்டுச்சேவல் சாஸ்திரம் இருந்த்து. கோடையில் சந்தை கூடும் அனைத்து நாட்களிலும் கட்டு நடக்கும். காலையில் சாமான்களை வாங்கிய பெண்கள் வெயில் சாய இதே வேடர் குறிஞ்சி ஆல மரத்தின் கீழ்தான் சேவக்கட்டு ஆடியுள்ளனர்”**[5]

எனும் வழி புலனாகின்றது. வீர விளையாட்டு ஆணுக்குரியது எனும் பாலின மதிப்பு ஆப்ப நாட்டில் விஞ்சியிருந்தமை உணரலாகின்றது.

**திருமண மதிப்புகள்**

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் திருமணத்தில் இரு மனங்களுடன் குடும்பமும் இணைகின்றது குடும்பம், சமூகத்தின் அடிப்படை அலகாதலால் சமூகம் பின்பற்றும் பல சடங்குகள் திருமணத்தில் இடம்பெறுகின்றன. குறிப்பாக ஆண்கள் தங்கள் வீரத்தை நிறுவிய பின்பே பெண்ணை மணம் முடிக்க இயலும் எனும் கட்டுப்பாடு தொல்காலத்தில் பல சமூகக் குழுக் களில் காணப்பெறுகின்றது. இதனை சேவல்கட்டு புதினம்,

**“காளைகளை ஜெயிக்க சொல்லி வாக்கபட்ட மாதிரி பெண்கள் வளர்த்த சேவல்களை வெற்றி கொண்டால்தான் திருமணம் எனக் கூறிய பெண்கள் ஏராளம்”**[6] எனுமாறு பதிவு செய்கின் றது. சேவல்கட்டு வாயிலாக திருமண மதிப்பை சமூகத்தின் ஆண் அங்கத்தினர் அடைந்து உள்ளனர் என்பது இதன்வழி புலனாகின்றது.

**முடிவுரை**

சேவல்கட்டு எனும் புதினம் சேவலுக்கும் மனிதனுக்குமான உறவுப்பிணைப்பை வெளிப் படுத்துகின்றது. ஒரு விளையாட்டுக்கு சமூகம் உயர்மதிப்பை வழங்கியுள்ளது. அக்கட்டமைப்பில் வாழ்ந்த ஊர் ஜமீன்கள் தங்கள் அதிகாரத்தின் மதிப்பு கூட்டுப்பொருண்மையாக சேவல்கட்டைக் கருதியுள்ளனர் இதனால், உயிரை விட, உடைமையை விட உயர்ந்த்தாக சேவல்கட்டைக் கருதி வாழ்ந்திடும் வாழ்க்கை நிலைக்கு ஆட்படுகின்றனர். இறுதியில், சேவல் கட்டில் ஏற்படும் தோல்வியை சமூக மதிப்புக்கு ஏற்பட்ட இழுக்கென நினைத்து தற்கொலை செய்திடும் சூழல் உருப்பெறுகின்றது. இதனின்று சமூக மதிப்பு உருவாக்கம் சேவல்கட்டு புதினத்தில் சேவல் கட்டு எனும் மரபார்ந்த மற விளையாட் டால் கட்டமைக்கப் பெறுகின்றது எனும் கருதுகோள் நிறுவப்பெறுகின்றது.

**குறிப்புகள்**

1. ம. தவசி, சேவல்கட்டு, ப. 11
2. ம. தவசி, சேவல்கட்டு, ப. 12
3. ம. தவசி, சேவல்கட்டு, ப. 15
4. ம. தவசி, சேவல்கட்டு, ப. 22
5. ம. தவசி, சேவல்கட்டு, ப. 25
6. மேலது

**துணைநின்றவை**

1. ம. தவசி, சேவல்கட்டு, புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை - 83
2. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பதிப்பகம், சென்னை - 9